மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் ஏற்கனவே சொன்னபடி இது பெயர் வைப்பதல்ல. இது பரிசு. வேளாண்மை செம்மல் என்பது பட்டம். அது தவிர பணம் ஏறத்தாழ இரண்டாயிரம் ரூபாய் அளவிற்குக் கொடுத்து வருகிறோம். எந்த ஒரு விவசாயி அதிகப்படியான விளைச்சலைக் காண்பிக்கிறார்களோ அவர்களை உற்சாகப்படுத்துகிற வகையில், ஊக்கப்படுத்துகிற வகையில் நாம் பரிசு கொடுத்து வருகிறோம். அது நெல் என்ற வகையில் மிகச் சிறப்பாக எல்லா மாவட்டங்களிலும் நன்கு நடந்து வருகிறது. அதேபோல் புன்செய் தானியங்களுக்கும் இவ்வாறு பரிசு கொடுக்கலாமா என்ற திட்டத்தை இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதைச் செய்யலாம் என்று கருதுகிறோம்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether there is any scheme for giving prizes to persons growing horticultural crops in the State ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சோளம், கம்பு, கேழ்வரகு பற்றிய கேள்வி இது. அவர்கள் பழவகைகள், கிழங்கு வகைகள் பற்றிக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எஸ். வடிவேல் : புன்செய் தானியங்கள் மட்டுமல்ல, நன்செய் தானியங்களில் கூட தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடியில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியில் அது வராது.

Housing Board Unit in Kanyakumari district.

* 18 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Housing Board Sub-Division Office for Kanyakumari district is not functioning within Kanyakumari district ; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தின் பணிகளை மேற்கொள்ளும் உட்கோட்ட அலுவலகம் கன்னியாகுமரி மாவட்டத்திற்குள் அமைக்கப்படவில்லை. திருநெல்வேலி மாவட்டத்தில்

1975 அக்டோபர் 23]

அமைந்திருக்கும் உட்கோட்ட அலுவலகம் கன்னியாகுமரி திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களையும் அதன் அதிகார வரம்பிற்குள் கொண்டுள்ளது.

(இ) உட்கோட்ட அலுவலகங்கள் வேலைப் பளுவின் அடிப் படையில்தான் அமைக்கப்படுகிறது ; மாவட்டவாரியாக அல்ல.

திரு. என். டென்னிஸ்: அங்கே சப் டிவிஷன் ஆபீஸ் இல்லாத காரணத்தால் வேலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, தீவிரமாக அது செயல்படவில்லை. எனவே, அங்கு ஒரு சப் டிவிஷன் ஆபீஸ் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சப்டிவிஷன் ஆபீஸ் என்றால் இது ரெகுலர் ஆபீஸ் மாதிரியல்ல. எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்படுகிறதோ அதைப் பொறுத்துத்தான் சப் டிவிஷன் ஆபீஸ் என்று வருகிறது. இருபது லட்சம் ரூபாய் வரவு செலவு இருந்தால்தான் அதற்கு சப் டிவிஷன் ஆபீஸ் அமைக்கப்படும். மாவட்டத்திற்கு ஒரு சப் டிவிஷன் ஆபீஸ் என்று கிடையாது. நம் மாநிலத்தில் இருப்பது மூன்று சர்கிள் தான். இப்போது அங்கு நடந்து கொண்டிருக்கிற வேலை மூன்று லட்சம் ரூபாய் அளவிற்கு திட்டமிட்டு 64 வீடுகள் கட்டுகிற வேலைகள் நடக்கின்றன. அதற்கான சப் டிவிஷன் திருநெல்வேலியில் இருக்கிறது.

Tamil Nadu-Karnataka bus services

* 19. *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state whether any negotiations are going on between Tamil Nadu Government and Karnataka Government on the running of buses on inter-State routes in these States?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆம்.

THIRU B. VENKATASWAMY: Sir, for persons who want to go to Bangalort from Hosur and other places of the State, there is no inter-State bus connection between Tamil Nadu and Karnataka, and consequently they are suffering. So, may I request the Government to run a shuttle service consisting of at least half a dozen buses from Hosur to Bangalore so that the people in Tamil Nadu can easily reach Bangalore? Also, people